1974 சனவரி 24]

எனவே, கிராமங்களிலிருக்கின்ற அந்தந்த பால் பண்ணைகள், அந்த கிராமத்திலே விரும்புகிறவர்களுடைய வீடுகளுக்குச் சென்று பால் கொடுக்கின்ற முறையில் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கிராமங்களிலிருக்கின்ற பால் வழங்குகிற கூட்டுறவு சங்கங்கள் அந்தந்த கிராமங்களுக்குத் தேவையான பாலை வழங்கி, மீதமுள்ள பாலைத்தான் பால் பண்ணைகளுக்குத் தருகிறார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கிற இடங்களில் இப்படித்தான் ஏற்கனவே நடைபெற்று வருகிறது. மேலும், கிராமப்புறங்களில் பால் வளத்தைப் பெருக்குவதற்காகவும், எல்லா கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி அதன் மூலம் மக்கள் பயன் அடைகின்ற வகையிலும் எதிர்காலத்தில் நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் அரசாங்கத்தின் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

Price of milk in Madras

*149 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious and Endowments be pleased to state—

(*a*) whether the prices of the milk supplied in Madras by the Dairy Corporation has been increased from the middle of April 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(அ) ஆம். பாற்பண்ணைக் கழகம், பாலின் விலையை 1973 ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாளிலிருந்து உயர்த்தியுள்ளது.

(இ) தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம் தான் வழங்கும் பல வகையான பாலின் விலைகளைக் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைத்துள்ளது.

புட்டிப்பால்.	லிட்டர் ஒன்றுக்கு முன்பிருந்த விலை.	லிட்டர் ஒன்றுக்கு மாற்றியமைக்கப் பட்ட விலை.	கொழுப்பு சத்தின அளவு.	கொழுப்பு சத்து அல்லது பிற சத்துக்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)
	ரூபாய்.	ரூபாய்.	சத விகிதம்.	சத விகிதம்.
(அ) தரப்படுத்தப்பட்ட பால்.	1·30	1·50	4·5	8·5
(இ) தரம் உயர்த்தப் பட்ட பால்.	1·00	1·20	3·0	8·5

[1974 சனவரி 24

புட்டிப்பால்.	லிட்டர் ஒன்றுக்கு முன் பிருந்த விலை.	லிட்டர் ஒன்றுக்கு மாற்றி யமைக்கப் பட்ட விலை.	கொழுப்பு சத்தின் அளவு	கொழுப்பு சத்து அல்லது பிற சத்துக்களை.
(1)	(2)	(3)	(4)	(5)
(உ) தரம் இரட்டிப் படுத்தப்பட்ட பால்.	..	..	1·5	9·0
II ஏனங்களில் பெருமளவில் அனுப்பப்படும் பால்.				
(அ) தரப்படுத்தப்பட்ட பால்.	1·40	1·60	4·5	8·5
(இ) தரம் உயர்த்தப் பட்ட பால்.	1·12	1·30	3·0	8·5
III சிறப்பு தேவைக்குறிப்பு களின் மேல் அனுப்பப் படும் பால்.				
தரப்படுத்தப்பட்ட பால்.	2·00	2·20	4·5	8·5

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, பால் உற்பத்திக் குறையாமல் இருக்கும்போது பால் விலை உயர்ந்திருக்கிறது. எனவே, பொதுமக்களின் வசதியை முன்னிட்டு, பாலின் விலையை நிர்ணயிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பால் உற்பத்தி குறையாமல், அதிகரித்திருக்கிறது என்பதை ஒத்துக் கொள்ளலாம். ஆனால் மாதவரம் பால் பண்ணைக்கு வருகின்ற பாலின் அளவு குறைந்துவிட்டது. அதற்குக் காரணம், வெளி மார்க்கெட் நிலவரப்படி பாலின் விலை அதிகமாகி இருப்பதுதான்; எனவே, பாலை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் பாலின் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்திருந்தார்கள். அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் பாலின் விலை உயர்த்தப் பட்டிருக்கிறது.